1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் சில தமிழ் அறிஞர்களைப் பொதுவாகப் போட்டிருக்கிறோமே தவிர, இந்தக் குழுவிலே எல்லாத்தரப்பினருக்கும் பிரதிநிதித்துவம் தந்து இதை ஆராய்ந்து பார்க்கும் நிலை இருந்தால், இது எந்தக்காலத்திலும் நடைபெற முடியாது. ஒவ்வொரு துறையிலும் சிறந்தவர்கள் இருக்கலாம். அதற்காக எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற நிலைக்குப் போனால், இந்தக் குழுவைப் போட்டு செயல்படுத்த முடியாது. இப்போது போட்டிருக்கின்றவர்களைச் சிறந்தவர்கள் என்று நாங்கள் கருதுகிறோம். அவர்கள் தருகின்ற அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து, நாம் அந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கலாம்.

கல்லூர் கஜலட்சுமி சிட்பண்ட்.

*வினா எண் 289—திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கல்லூர் கஜலட்சுமி சிட்பண்ட் (No. 125 AA XIII) இயங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) புதுக்கோட்டையிலுள்ள பல கஜலட்சுமி சிட்பண்ட் அங்கத்தினர்களுக்கு பரிசுத் தொகை ரூ. 5,000 நாளது வரையில் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் என்றால் மேற்படி பரிசுத் தொகையை அங்கத்தினர்களுக்கு பெற்றுத் தர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை சீட்டுப் பதிவாளரால் விசாரணை செய்யப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் நடத்தப்படும் சில சீட்டுக்களில் சில இனங்களில் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று தெரியவந்தது.

(இ) கடலூர் மற்றும் புதுக்கோட்டை சீட்டுப் பதிவாளரால் விசாரணைக்கு பின் சீட்டு நிதிச் சட்டத்தின் விதிமுறைகளை மீறியதற்கு வழக்குத் தொடரப்பட்டு சம்பந்தப்பட்ட

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இனங்களில் உரிய நீதி மன்றத்தால் அபராதம் விதிக்கப் பட்டது. சந்தாதாரர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யாதது குறித்து அவர்கள் நீதி மன்றம் மூலம் தான் தக்க பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். ஏனெனில் இவை சீட்டு முன் பனுக்கும், சந்தாதாரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத் திற்க உட்பட்டவையாகும்.

[முற்பகல் 9-50].

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : கஜலட்சுமி சிட்பண்ட், சுதர்சன் சிட்பண்ட் ஆகியவை சீட்டுப் பணத்தைப் பட்டுவாடா செய்யா மல் இருப்பது பற்றி ஏராளமான கேசுகள் திருச்சியில் இருக்கின் கின்றன. இது பற்றிப் போலீசில் புகார் செய்தால், இது சீட்டிங் செக்ஷனில் வராது, கேஸ்களைப் பதிவு செய்ய மாட் டோம் என்று சொல்லுகிறார்கள். கோர்ட்டுக்குச் சென்றால் நீண்ட நாட்கள் ஆகின்றன. ஆகவே, சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்து நேரடியாகப் பணத்தை வசூல் செய்து கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் சீட்டுக்களை நடத்துகிற பலர் இதுபோன்ற தவறுகளில் ஈடுபட்டுள்ளது அரசுக்குத் தெரிய வந்துள்ளது. ஆனால் தற்போது இருக்கிற தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்பண்டு ஆக்ட் பிரிவுகளின் அடிப்படையில் அதிகப்படியான தண்டனை தரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அது ''பிட்வீன் பார்ட்டிஸ்'' ஏற்படுகிற காண்டிராக்ட் என்று சொல்லப் படுகிறது. இதிலுள்ள லயபிலிடி சிவில் லயபிலிடியாக இருப்ப தால் குற்ற இயல் மூலமாக நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிட் பண் பண்ட் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து அதிகப்படியான தண்டனையைத் தர வேண்டும். தற் போதுள்ள பிரிவு 56 (2) ல் தரப்படுகிற தண்டனை சீட்டுப் பணத்தைத் தரவில்லை என்றால் அதிகபட்சமாக அந்த போர்மனுக்கு விதிக்கப்படக்கூடிய அபராதம் 100 ரூபாய்தான். அதிகப்படியான அபராதமோ 100 ரூபாய் என்று சொல்லும் போது பல நேரங்களில் ஒருவர் ஆயிரக்கணக்கான ரூபாயை ஏமாற்றிவிட்டு அபராதமாக 10 ரூபாய், 15 ரூபாய் விதிக்கப் பெற்று தப்பித்துக் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. முக்கியமாக அனுமதி பெறாமல் சீட்டை நடத்தினால் அவர் களுக்கு அதிகப்படியான தண்டனை ஓராண்டு சிறைத் தண்டனை அல்லது ரூ. 500 என்று இருக்கும்பொழுது அவர் சிறைத் தண்டனையில் இருந்து தப்பித்து குறைந்த பட்ச ஙபன் 50 ரூபாய் கட்டிவிட்டுதப்பித்துக் கொள்ளுகிற சூழ் நிலை இருக்கிறது. ஆகவே, அரசு புதிய சட்டத் திருத்தத்தை விரைவில் கொண்டு வந்து தக்க நடவடிக்கை எடுக்க முயற்சித்து வருகிறது.